**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 125** **நாள்:27.08.2019**

**“வெறிநாய்க்கடி நோய் இல்லா மாநகரம்” என்ற இலக்கினை அடைய மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடும் திட்டம் மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கும் திட்டம் மண்டலம் வாரியாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

“வெறிநாய்க்கடி நோய் இல்லா மாநகரம்” என்ற இலக்கினை பெருநகர சென்னை மாநகராட்சி அடைய தீர்மானிக்கப்பட்டு, பொதுசுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடும் திட்டம் மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கும் திட்டம் மண்டல வாரியாக செயல்படுத்த திட்டமிடப்பட்டது. மண்டலங்களில் மண்டல அலுவலர், மண்டல நல அலுவலர் மற்றும் கால்நடை உதவி மருத்துவர் ஆகியோரின் மேற்பார்வையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக மாதவரம் மண்டலத்தில் இத்திட்டம் 16.07.2019 அன்று தொடங்கப்பட்டு 8 நாட்கள் செயல்படுத்தப்பட்டு மொத்தம் 8,846 நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்க மருந்து செலுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஆலந்தூர் மண்டலத்தில் 30.07.2019 அன்று இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 4 நாட்களில் 3,474 நாய்களுக்கு தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்க மருந்து செலுத்தப்பட்டது. அம்பத்தூர் மண்டலத்தில் இத்திட்டம் 13.8.2019 அன்று துவங்கப்பட்டு, 9 நாட்களில் 8,243 நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, நாளை முதல் (28.08.2019) சோழிங்கநல்லூர் மண்டலத்தில் இத்திட்டம் நடத்தப்பட உள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தும் பொழுது, பொதுமக்கள் தாமாக முன்வந்து தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணிகளுக்கும் தடுப்பூசியினை போட்டுக்கொண்டு பயனடைந்துள்ளனர். மாதவரம், ஆலந்தூர் மற்றும் அம்பத்தூர் மண்டலங்களில் 1,291 செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது,

இத்திட்டத்தினை செயல்படுத்துகையில், பொதுமக்களிடம் வெறிநாய்க்கடி நோய் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இதன் மூலம் வெறிநாய்க்கடி நோய் மற்றும் அக, புற ஒட்டுண்ணி தாக்குதலிலிருந்து தெருநாய்களுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் இச்சிறப்புத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**